பிரிவு 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாது காத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1979) சட்டமாக நிறைவேற்றப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

10. அரசினர் தனித் தீர்மானம்.

(அ) மாவட்ட நகராட்சிச் சட்டம் (1920)-ன் கீழ் புதிய விதி 62ஏ-வைச் சேர்த்தல்.

மாண்புமிகு திரு. சா. சாளிமுக்கு : தலைவரவர்களே, தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV ஆம் விவர அட்டவணையில் விதியொன்றைச் சேர்க்கும் வகையில், அச்சட்டத்தின் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், தமிழ்நாட்டு ஆளுநரால் செய்யக் கருதப்பட்டுள்ள ஒரு திருத்தத்தின் கீழ்க்காணும் வரைவு ஏற்கப்பட வேண்டுமென முன்மொழிகிறேன் :—

வரைவுத் திருத்தம்

தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1970) IV ஆம் விவர அட்டவணையில் 62-வது விதிக்குப் பின்னர் கீழ்க்காணும் விதி அமைத்துக்கொள்ளப் பட வேண்டும் ; அதாவது :

" 62-A நகராட்சிகள், அரசு முடிவு செய்யக்கூடிய ஊதியத் தொகையை நகராட்சி நிதியிலிருந்து தணிக்கையாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். "

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த திருத்தத் தீர்மானத்தை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். எக்சாமினர் ஆப் லோகல் பண்ட் அக்கவுண்ட்ஸ் அவர்களின் கணக்கின்படி ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள், கார்ப்பரேஷன்கள் இவைகள்

மூலமாக வரக்கூடிய மொத்த வருமானம் ஆண்டுக்கு சுமார் 312 கோடி. அதில் நகராட்சிகளும், கார்ப்பரேஷன்களும் அவைகளின் வருமானத்தில் 0.5 சதவீதம் தணிக்கையாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இவை எல்லாவற்றிலும் வரக்கூடிய மொத்த வருமானம் சுமார் 312 கோடி ரூபாய் என்றால் இதிலே 0.5 சதவீதம் தணிக்கையாளர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று சொன்னால் கிட்டத்தட்ட ரூ. 15 கோடியே 60 இலட்ச ரூபாய் அரசு எதிர்பார்க்கிறது என்றுதான் அர்த்தம்.

[பிற்பகல் 1·00]

இது அநேகமாக ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் இவற்றிற்குக் கிடையாது. நகராட்சி மன்றங்களைப் பாதிக்கக்கூடிய வகையில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நகராட்சிகளுடைய நிதி நிலைமை படுமோசமாக இருந்துகொண்டிருக்கிறது. வரிகளுக்கு மேல் வரிகள் தனி அதிகாரிகளால் ஆலோசனைக் குழுவின் ஆலோசனையை மீறி போட்டு வந்தாலும், அங்குள்ள நிதி நிலை படுமோசமாக இருக்கிறது. படுமோசம் என்று நான் சொல்லும் போது அங்கு ரோடு வசதிகள் இல்லை. வெள்ளத்தால் பாழ் பட்ட ரோடுகள் சீர்செய்யப்படவில்லை. அவற்றிற்கான பராமரிப்பு சரியாக இல்லை. தெரு விளக்குகள் சரிவர எரிவதில்லை. எதற்கெடுத்தாலும் நிதி இல்லை நிதி இல்லை என்று சொல்கிறார்கள். சுகாதார வசதி மோசம். சாக்கடையை துப்புரவு செய்து எடுக்க வண்டி கிடையாது. தண்ணீர் எடுக்க வண்டி கிடையாது. ப்ளீச்சிங் பவுடர் வாங்க வசதி இல்லை என்று சொல்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: வேறு சப்ஜக்ட்ஸ்க்கு போகிறீர்களே. இது தணிக்கையாளர்களுக்கு ஊதியத்தொகை கொடுப்பது பற்றியது.

<u>திரு. சி. கோவிந்தராசன்</u>: இதற்கெல்லாம் நிதி இல்லை என்று சொல்லும்போது, முனிசிப்பாலிட்டியின் வருவாய் ரூ. 20 லட்சம் என்றால் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் தணிக்கையாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய சூழ்நிலை வருகிறது. ஆக, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இது சரியல்ல. பேரூராட்சிகள் தான் மூன்றாம்தர முனிசிப்பாலிட்டியாக மாற்றப்படுகின்றன. ஆகவே இப்படிப்பட்ட ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து மேலும் நிதிப்பளுவைக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

பேரவை முன்னுள்ள கேள்வி—

" தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV ஆம் விவர அட்டவணையில் விதியொன்றைச் சேர்க்கும் வகையில், அச்சட்டத்தின் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், தமிழ்நாட்டு ஆளுநரால் செய்யக் கருதப்பட்டுள்ள ஒரு திருத்தத்தின் கீழ்க்காணும் வரைவு ஏற்கப்படவேண்டுமென முன்மொழிகிறேன் :—

வரைவுத் திருத்தம்.

தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV ஆம் விவர அட்டவணையில் 62-வது விதிக்குப் பின்னர் கீழ்க்காணும் விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் ; அதாவது :—

' 62-A நகராட்சிகள், அரசு முடிவு செய்யக்கூடிய ஊதியத் தொகையை நகராட்சி நிதியிலிருந்து தணிக்கையாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் '.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) பருத்தி போக்குவரத்துச் சட்ட விதிகளில் திருத்தம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

" தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளின் 7, 8-வது விதிகளைத் திருத்தி, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் அரசால் வெளியிடப்படவிருக்கும் கீழ்க்கண்ட வரைவு அறிவிப்பு, மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படலாம்.

வரைவு அறிவிப்பு.

1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் வழங்கப் பெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள்,